ISSN 2792 - 1050


# வெண்ணிலா

காலாண்டிதழ்.
QUARTERLY.


வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.



கவிச்சுடர்
ஏ. எம். கஸ்புள்ளா



கலாபூஷணம்
பி.எம்.எம்.ஏ. காதர்



எழுத்தாளர்
வ. ந. கிரிதரன்

ஒவ்வொரு இதழும்
ஒரு கவிதைத் தொகுதி.

இதழ்: 09 - ஏப்ரல் 2023. விலை: ரூபா. 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Jesa Grafix

Graphic Designing & Printing

*No. 289, Main Street, Maruthamunai*

**PHOTOCOPY**
**TYPESETTING**
**GRAPHIC DESIGNING**
**OFFSET PRINTING, LAMINATING**
**BINDING, STATIONARY**
**PHONE CARDS**
**RELOADS**
**&**
**MUCH MORE SERVICES**
**at Cheapest rates.**

**075 656 9393**

**jesagrafix24@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா

வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence

காலாண்டிதழ் ISSN 2792 - 1050

மூன்றாவது ஆண்டு - இதழ்: 09 - ஏப்ரல் 2023.


வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.


**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்**
kavignarsagaffar@gmail.com

**முகவரி:**
**378/2, ஸம் ஸம் வீதி,**
**மருதமுனை - 03 # 32314,**
**இலங்கை.**

**மின்னஞ்சல்:**
vennilakavithaimanjari@gmail.com
**தொடர்பு:**
07 5858 5656 / 077 6968 671.
**வட்ஸ்அப்:** 077 6968 671.


•••


**Digital Printing:**
S. A. Jezeem, Jesa Grafix,
Main Street, Maruthamunai.

**Information Technology:**
A. G. Afraan Muhammed
(University of Ruhuna.)

**Layout Design:**
S. A. Abdul Gaffar DICP, DIHE & DIEC

**Published by:**
Digital Information System (DIS)


•••

**சந்தா விபரம்:**
தனி இதழ் ரூபா. 50/=
தபாலில் பெற ரூபா. 150/=
ஆண்டுச் சந்தா ரூபா. 600/=

வங்கி மூலம்:
இலங்கை வங்கி, கல்முனை.
கணக்கிலக்கம் 6106068
(எஸ். ஏ. கப்பார்)

## உள்ளே...


ஆசிரியர் பக்கம்: (4)
- இதழாசிரியர்.

கட்டுரை: (6)
- கவிச்சுடர் ஏ.எம். கஸ்புள்ளா

தடம்பதித்த மூத்த கவிஞர்கள்: (15)
- கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ காதர்

மஞ்சரி கவிதைகள்: (16)
- அலியார் TO
- மருதமுனை விஜிலி
- Dr. ஜலீலா முஸம்மில்
- த. நடேஸ்
- நழீம் ஹனீபா
- S. ஹஸீனா ஆதம்பாவா
- இமையி
- அலெக்ஸ் பரந்தாமன்
- கவிப்பொய்கை ஜவ்சன்
- சம்மாந்துறை மஷூறா
- எண்ணக்கவி நவ்ஷாட் நஸ்கா
- மருதூர் மௌஜுன்
- மயிலிறகு மனசு ஷிபானா அஸீம்
- ரிஹானா ஹரிஸ்கான்
- முகமட் றாபி
- ஏ. ஆர். அப்துல் றசூல்
- மருதூர் ஜமால்தீன்
- கவிமணி அ. கௌரிதாசன்
- ராஜகவி ராகில்
- எழு கவி

படித்தவற்றில் பிடித்தவை: (37 )
- நியாஸ் ஏ. ஸமத்
- மருதமுனை ஹஸன்
- ஷியாம்
- எம் எச் எம் கரீம்
- ஜமீல்
- நபீல்

முகநூல் பதிவு: (41)
- வ. ந. கிரிதரன்


அட்டையில்:
- கவிச்சுடர் ஏ. எம். கஸ்புள்ளா
- கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ. காதர்
- எழுத்தாளர் வ. ந. கிரிதரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாவது ஆண்டில்...

மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் 'வெண்ணிலா' கவிதை மஞ்சரியின் சந்தாத்தாரர்களின் தொகையிலும் வாசகர் தொகையிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி படிப்படியாக ஏற்பட்டு வருவது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது.

அதே வேளை பத்திரிகை அச்சிடப் பயன்படுத்தப்படும் தாள், மை போன்ற பொருட்களின் இமாலய விலையேற்றமும் தபாற் செலவில் ஏற்பட்டுள்ள அதீத அதிகரிப்பும் சிறிது கவலையளிக்கிறது.

மறுபுறம் தொடர்ந்து மஞ்சரிக்குப் பங்களிப்புச் செய்துவரும் விளம்பர அனுசரணையாளர்களதும், மஞ்சரியை உரிய காலத்தில் அச்சிட்டுத்தரும் டிஜிட்டல் அச்சகத்தினதும், நாடளாவிய வாசகர்களதும் ஒத்துழைப்பையும் உடனுக்குடன் கவிதைகளையும் மற்றும் கவிதைகள் பற்றிய ஆக்கங்களையும் அனுப்பி உதவும் படைப்பாளிகளின் உற்சாகத்தையும் பார்க்கும்போது ஒரு தெம்பேற்படுகிறது.

**புதியவர்கள்:**
புதிதாக எழுத ஆரம்பித்துள்ள கவிஞர்கள் தாங்களும் கவிதைகளை அனுப்பலாமா என்றும் எவ்வாறு அனுப்பவேண்டுமென்றும் அடிக்கடி வினவுகின்றனர்.

"வாசிப்பை மேம்படுத்துவதும் புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்". எனவே உங்களது ஆக்கங்களைத் தயக்கமின்றி எமக்கு அனுப்பிவையுங்கள். தரமானவை நிச்சயம் பிரசுரிக்கப்படும்.
ஆக்கங்களை யூனிகோட் வடிவில் வட்ஸ்அப் அல்லது மின்னஞ்சலில் தமிழில் தட்டச்சுச் செய்து எமக்கு அனுப்பிவையுங்கள். MS Office word file ஆகவும் அனுப்பிவைக்கலாம்.

**இவ்விதழில்:**
எழுத்தாளர் கவிச்சுடர் ஏ. எம். கஸ்புள்ளா அவர்களின் "மேடை வானொலி நாடகங்களில் கிண்ணியா முஸ்லிம் கலைஞர்களின் பங்களிப்பு" சிறப்புக் கட்டுரை இவ்விதழை அலங்கரிக்கிறது.

'தடம்பதித்த மூத்த கவிஞர்கள்' தொடரில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் எழுத்தாளரும் கவிஞருமான கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ. காதர் அவர்களின் 'என் உயிரான உம்மா' கவிதையினைப் பிரசுரித்து அவரைக் கௌரவப்படுத்துகிறோம்.

'மஞ்சரி கவிதைகள்' தொடரில் 20 கவிஞர்களினதும் 'படித்தவற்றில் பிடித்தவை' தொடரில் 6 கவிஞர்களினதுமாக மொத்தம் 27 கவிஞர்களின் முத்தான 30 கவிதைகள் இடம்பெறுகின்றன.


'முகநூல் பதிவு' தொடரில் 'பதிவுகள்' இணைய இதழ் ஆசிரியர் வ. ந. கிரிதரன் அவர்களின் முகநூல் பக்கத்திலிருந்து பெறப்பட்ட விருதுகளும் விமர்சனங்களும் பற்றிய சிறந்ததோர் பதிவு இடம்பெறுகிறது. வ. ந. கிரிதரன் அவர்களுக்கு நன்றி.
**- இதழாசிரியர்.**

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் டீன் கபூரின் "வேரினிடை"
(தனது தமிழ்க் கவிதைகளும்
அவற்றின் ஆங்கில
மொழிபெயர்ப்புக்களும்)
கவிதை நூல்

●●●




இந்தியாவைச் சேர்ந்த
கவிஞரும் எழுத்தாளரும்
மொழிபெயர்ப்பாளருமான
ஸ்ரீ என். ஸ்ரீவட்சா அவ்வப்போது முகநூலில்
பதிவேற்றம் செய்துவந்த, வருகின்ற
நட்புக் கவிஞர்களின் தமிழ்க் கவிதைகளை
அவர்களின் ஒப்புதலோடு
ஆங்கிலத்திற்கு மாற்றம் செய்து
அக் கவிதைகளை தமிழ், ஆங்கிலமாக
தனது சுவட்டில்
பதிவேற்றம் செய்து வருகிறார்.

ஸ்ரீவட்சா இதுவரை ஆங்கிலத்தில்
மொழியாக்கம் செய்த கவிதைகளின்
தமிழ் ஆங்கிலத் தொகுப்புக்களாக,
கவிஞர் முகமது பாட்சாவின்
"ஆரிகாமி வனம்",
கவிஞர் மதுராவின்
"பெண் பறவைகளின் மரம்",
கவிஞர் ரத்னா வெங்கட்டின்
"கின்ட்சுகி",
கவிஞர் ஜே மஞ்சுளா தேவியின்
"ரயில் கோமாளிகள்",
கவிஞர் வண்ணதாசனின்
"Selected Poems of Kalyanji"
கவிஞர் உமா மோகனின்
"முகமுகமாய்ப் பூத்த மரங்கள்",
கவிஞர் ஏ.நஸ்புள்ளாஹ்வின்
"A. Nasbullah poems"
ஆகிய ஏழு கவிதை நூல்கள்
இதுவரை வெளிவந்திருக்கின்றன.

இவற்றின் தொடராக
கவிஞர் டீன் கபூரின்
"வேரினிடை" கவிதை நூல்
ஸ்ரீ என். ஸ்ரீவட்சாவின் மொழிபெயர்ப்பில்
எட்டாவது தமிழ் ஆங்கில
கவிதை நூலாக "வெண்ணிலா"
வெளியீட்டுப் பணியகம்
வெளிக்கொணர்வதில் மட்டில்லா
மகிழ்ச்சியடைகிறது.

இதன் வெளியீட்டு நிகழ்வு கவிஞர்
டீன் கபூரின் வீட்டு முற்றத்தில்
நடைபெறவுள்ளது. காலம், நேரம்
விரைவில்.

தொடர்புகளுக்கு :
வெண்ணிலா வெளியீட்டுப் பணியகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேடை வானொலி நாடகங்களில் கிண்ணியா முஸ்லிம் கலைஞர்களின் பங்களிப்பு.

- கவிச்சுடர் ஏ. எம். கஸ்புள்ளா

**ஆய்வுச் சுருக்கம்**

மார்க்கத்தில் விவரிக்கப்பட்டுள்ள விஷயங்களை சித்தரிக்க இஸ்லாம் ஒரு போதும் அனுமதித்தது கிடையாது. இடைக்கால இஸ்லாமிய உலகில் மிகவும் பிரபலமான நாடக வடிவங்கள் பொம்மை நாடகம் (இதில் கைபொம்மலாட்டங்கள், நிழற்படங்கள் மற்றும் மரியோனெட் தயாரிப்புகள் ஆகியவைகள் அடங்கும்). தாஜியா எனப்படும் நேரடி உணர்ச்சி நாடகங்களைப் பொருத்தவரை அங்கு நடிகர்கள் முஸ்லிம் வரலாற்றிலிருந்து அத்தியாயங்களை மீண்டும் செயற் படுத்துகின்றனர்.

குறிப்பாக ஷியா இஸ்லாமிய நாடகங்கள் அலி(ரழி) அவர்களின் மகன்களான ஹஸன் இப்னு அலி மற்றும் ஹுஸைன் இப்னு அலி ஆகியோரின் தியாகத்தை சுற்றி எழுதி நடிக்கப்பட்டன.

மேலும் நேரடி மதசார்பற்ற நாடகங்கள் அக்ராஜா என அழைக்கப்பட்டன. அவை இடைக்கால அடாப் இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் அவை பொம்மலாட்டம் மற்றும் உணர்ச்சி நாடகங்கள் என்பவற்றை காட்டிலும் குறைவாக காணப்பட்டன.

1947இல் பாகிஸ்தான் சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட தேசியவாதம் வலுவானது. மற்றும் நாட்டின் இருபிரிவுகளிலும் தியேட்டர்களை பாதித்தது. கிழக்கு பாகிஸ்தானில் நவீன நாடக எழுத்தாளர்களாக இப்றாகிம் கான் (1894 - 1978 இலும்), இப்றாகீம் கலில் (1916 இலும்), அக்பர் அட்தின் (1895 - 1978 இலும்) என பலர் தோன்றினர். இந்நாடக எழுத்தாளர்கள் துணைக்கண்டம் மற்றும் மத்திய கிழக்கின் இஸ்லாமிய வரலாறு தொடர்பான நாடகங்களை உருவாக்கி முஸ்லிம் ஆட்சியாளர்களையும் பாகிஸ்தான் இயக்கத்தின் வரலாற்றையும் மகிமைப்படுத்தினார்கள். இவ்வாறு இஸ்லாமிய வரலாற்றை சமயம் சார்ந்த கருத்துக்களை நாடகமாக எழுதுவதில் ஆர்வம் காட்டி வந்தனர். இதனூடாக முஸ்லிம்களின் நாடகத்துறை வளர்ச்சிடையத் தொடங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பின்பற்றியே இலங்கை முஸ்லிம்களும் பல்வேறு கலைகளில் தங்களது பங்களிப்புக்களை செய்துள்ளார்கள். குறிப்பாக எழுத்துத்துறை, ஓவியம், அரபு எழுத்தணிக்கலை, நடிப்புக் கலை, தற்காப்பு சீனடிக் கலை, றப்பான் இசைத்தல், சிலம்பு, பொல்லடி என்று இன்னும் வரிசைப்படுத்திச் சொல்லலாம். அதுபோலவே மேடை, வானொலி, நாடகங்கள் நடிப்பதிலும் பிரதிகள் எழுதுவதிலும் அவர்களின் பங்களிப்புகளை சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் அன்றுதொட்டு இன்றுவரை காணக்கூடியதாகவுள்ளது.

**பொதுப்பார்வையில் நாடகம்**

நாடகங்கள் மக்களை அதிகம் கவரக்கூடிய சுவாரஸ்யமான கதாபாத்திரங்களில் வாழ்க்கை நடைமுறைகளையும் விழிப்புணர்வையும் நகைச்சுவையுடனும் எடுத்துச் சொல்கின்ற இலக்கிய வடிவமாகும்.

முத்தமிழில் ஒன்றாக முடிசூடிக்கொண்ட நாடகம் படித்த, எழுதப்படிக்காத என எப்படிப்பட்டவர்களையும் ஆட்கொள்ளும் உணர்வுத்திறன் கொண்டது. சுதந்திர தாகம் வேண்டி நின்ற இந்திய புத்திஜீவிகள் தங்கள் கருத்துக்களை தெருக்கூத்து மற்றும் வீதி நாடகங்கள் என்பவற்றின் மூலம் வெள்ளைக்காரர்களுக்கெதிராக தம் கருத்துக்களை வெளியிட முக்கிய பங்களிப்புச் செய்தவைகளில் இந் நாடகங்களும் ஒன்றாகும். அந்த வகையில் வரலாற்றை ஞாபகப்படுத்தும் சாதனமாக நாடகங்கள் அமைந்துள்ளமையைக் காணலாம்.

**கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நாடகங்கள்**

நாடகத் துறையில் முஸ்லிம்களைப் பொருத்தவரையில் முகம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை சிறப்பிக்கும் வகையில் கொண்டாடப்படும் மீலாத் விழாவில் அவர்களது போதனைக் கருத்துக்களைக் கொண்ட நாடகங்கள் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் மீலாத் விழாவில் மேடையேற்றப்படும். இந் நாடகத்தைப் பார்வையிட ஆயிரக்கணக்கானோர் ஒன்றுகூடுவர். இவ்வாறான மேடைகளில் அரங்கேற்றிட முஸ்லிம் எழுத்தாளர்கள் விரும்பி நாடகப் பிரதிகளை எழுதினார்கள். இந்நாடகங்கள் முஸ்லிம் கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கும். நாடக அரங்கேற்றத்தின் போதும் முடிவின் போதும் நாடகத்தை எழுதியவர் பெயர், நடித்தவர்கள் பெயர்கள் வாசிக்கப்படும். அது இத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களை இன்னும் ஊக்கப்படுத்தியது.

நபித்தோழர்களான ஸஹாபாக்களின் நீதியான, நேர்மையான ஆட்சிகளை எடுத்துக் காட்டும் நாடகங்கள் எழுதப்பட்டு மேடையேற்றப்பட்டன. இவ்வாறான நாடகங்களான சமூக நாடகம், மேடை நாடகம், குறு நாடகம், வரலாற்று நாடகம், வீதி நாடகம், ஓரங்க நாடகம் போன்றவற்றுக்கும் பிரதிகளை எழுதி முஸ்லிம் கலைஞர்கள் நாடக இலக்கியத்துக்கு பங்களிப்புச் செய்துள்ளார்கள்.

1972 ஆம் ஆண்டு காலப்பகுதி மீலாத் விழா என்றாலே நாடகம் பார்க்கலாம் என்ற நிலையை ஏற்படுத்திய காலங்களாக அன்று இருந்தன. குறிப்பாக முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிழக்கு மற்றும் வடக்கு மாகாண மக்களிடையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடை நாடகங்கள் எழுச்சி பெற்றுக் காணப்பட்டன. மீலாத் விழாவே முஸ்லிம்களின் மேடை நாடகங்களுக்கு வழிசமைத்தன என்றும் சொல்லலாம். மேலும் முஸ்லிம்களின் இரு பெருநாள் விழாக்களிலும் பல்வேறு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. பெருநாள் விழாக்களில் மேடையேற்றப்படும் நாடகங்கள் வறியவருக்கு உதவுதல், பக்கத்து வீட்டுக்காரனும் சந்தோஷமாக பெருநாளைக் கொண்டாடவேண்டும் என்ற தொனிப்பொருளில் அமைந்திருக்கும்.

**ஆய்வின் நோக்கம்**

தற்காலத்தில் வாழும் நாடகக் கலைஞர்களையும் நாடகத்துக்குப் பிரதி எழுதுபவர்களையும் மற்றும் மறைந்த நாடகக் கலைஞர்கள் பிரதி எழுதுபவர்கள் அவர்களது வரலாற்றையும் ஆவணப்படுத்தி வருங்கால சமூகத்துக்கு இந் நாடகக் கலையினை கையளித்து அதனூடாக இளம் சமுதாயத்தை நாடகத்துறையின்பால் நாட்டம் கொள்ள வைத்தலின் தேவை உணரப்பட்டமையே நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

கிண்ணியாவை தளமாகக் கொண்டு அங்கு வாழும் நாடகப் பிரதி எழுதுபவர்கள் நடிப்பவர்கள் மற்றும் மறைந்த நாடக ஆசிரியர்கள் அவர்கள் ஆற்றிய பங்களிப்புகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக வகைப்படுத்தி முதல் நிலை தரவுகளாக பலரது நேர்காணல் மூலம் இவ்வாய்வுக்காக தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

**கிண்ணியாவில் நாடகத்துறையின் ஆரம்பம்**

**மர்ஹூம் எஸ்.ஏ. முத்தலிப்** அவர்கள் *1937.05.28* இல் பிறந்தவர். ஆசிரியராக, அதிபராக இருந்து ஓய்வுபெற்றவர். *1960* ஆம் ஆண்டு இவர் இலக்கிய நாடகத் துறையில் கால்பதித்தது மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானார். கிண்ணியாவின் நாடக இலக்கியம் இவரின் காலப்பகுதியிலிருந்தே ஆரம்பமாகின்றது.

நாடகத் தயாரிப்பு நாடகப் பிரதி எழுதுதல் போன்றவற்றில் இவர் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார். மேலும் இவர் எழுதிய 50க்கு மேற்பட்ட நாடகங்கள் மேடையேறியுள்ளன.

மனுநீதிச் சோழன், கண் திறந்தது, காசியப்பன், தியாகி, நீதி, ஹூர் மூர்ஸான் போன்ற நாடகங்கள் இவருக்குப் புகழினை ஈட்டிக் கொடுத்த நாடகங்களாகும். *1964* ஆம் ஆண்டு கிண்ணியாவில் நடந்த இலங்கை இஸ்லாமிய கலை விழாவில் இவரது தியாகி நாடகம் மேடையேற்றப்பட்டதாகும். கிண்ணியாவின் வரலாற்றிலே முதலாவது நடந்த இலங்கையின் இஸ்லாமிய கலை விழா இதுவாகும். இவ்விழாவிற்கு இலங்கையின் முதல் பெண் பிரதமரான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்கள் முன்னாள் ஒலிபரப்புத்துறை அமைச்சர் ஏ.எல்.ஏ. மஜீத் அவர்களின் அழைப்பின் பேரில் வருகைதந்தது மிகப்பெரும் கௌரவமாக நோக்கப்படுகிறது. *1960* தொடக்கம் *1980* வரையான காலப்பகுதியில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மர்ஹூம் எஸ்.ஏ. முத்தலீப் அவர்கள் நாடகத் துறையில் ஆற்றிய பங்களிப்பை பொற்காலம் என்று கூறலாம். மேலும் கிண்ணியாவில் நடைபெற்ற மீலாத் விழாக்களிலும் இவரது நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. வேலியோரத்து வெள்ளை ரோஜா என்பது இவரது கவிதை நூலாகும். இறக்கும் வரை இலக்கியம் செய்தவர்.

2008 இல் கிண்ணியா பிரதேச கலை இலக்கிய விழாவில் "அரங்க வேந்தன்" என்ற விருதும் கௌரவிப்பும் இவருக்குக் கிடைத்தது. பல ஆய்வுக் கட்டுரைகளையும் கிண்ணியாவின் பாரம்பரிய கலைகள் சம்பந்தமான நூல் களையும் இவர் எழுதியுள்ளார். இவரது காலப்பகுதியில் நாடகத் துறையில் பங்களிப்புச் செய்த இன்னொருவர்தான் **எஸ்.எம். சரீப்.** ஓய்வுபெற்ற அதிபராகும். இவரும் நாடகம், தயாரிப்பு, நெறியாள்கை போன்ற விடயங்களில் அளப்பரிய பங்களிப்பு செய்துள்ளார்.

1980 களில் கிண்ணியா மத்திய கல்லூரியில் நடைபெற்ற கலாசார விழாவில் இவரது ஒரேயொரு நீதி நடாகம் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டையும் பெற்றது.

அதுபோன்று இன்னொரு முஸ்லிம் கலைஞர் **மர்ஹூம் எஸ்.எஸ்.எல். முகம்மது மதார்** நாடக ஆசிரியராகும். இவர் எழுதிய "காசியப்பன்" நாடகத்துக்காக 1960 களில் மாவட்ட மட்டத்தில் முதல் பரிசைப் பெற்றார். காசியப்பன் என்ற தலைப்பில் பலர் நாடகம் எழுதியுள்ளனர். தலைப்பு ஒன்றாக இருந்தாலும் இதன் கரு, பாத்திர அமைப்புகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

**எம்.எச். முகம்மது நளீர்** (நாடகப் பிரதியாக்கம்)

விஞ்ஞானப் பாட ஆசிரியரான இவர் எழுதிய 16 நாடகங்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகியுள்ளன. அதேபோல 10 சிறுகதைகளும் ஒலிபரப்பாகியுள்ளன. 1990 தொடக்கம் 1995 வரை நாடகத்துறையில் மிகவும் பேசப்பட்ட ஒரு கலைஞராகும். 100க்கு அதிகமான கவிதைகளை வானொலி ஒலிமஞ்சரிக்கு எழுதியுள்ளார். எழுத்துத்துறையிலும் சமுக சேவையிலும் ஈடுபாடு கொண்ட இவர் கச்சக்கொடுத்தீவு ஜுஆப் பள்ளியில் தலைவராகவும் பல பொது அமைப்புக்களிலும் அங்கத்துவம் பெற்று சமூக பணிகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**கிண்ணியா ஹஸன்ஜி** (நாடகப் பிரதி எழுதுதல், நடித்தல்)

நாடகத்துக்குப் பிரதிகள் எழுதி பங்களிப்புச் செய்த முஸ்லிம் கலைஞர்களில் கிழக்கிலங்கை திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞரும் எழுத்தாளருமான ஐதுரூஸ் ஏ. ஹஸன் என்பவரும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்.

1974 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவரது மேடை நாடகங்கள் மீலாத் விழா, கலாசார விழா போன்றவற்றில் மேடையேற்றம் செய்யப்பட்டன. இஸ்லாமிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை கலாசாரத்தைப் பிரதிபலிக்கத்தக்கதான நாடகங்களாகவே மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் "இறை தீர்ப்பு" என்ற நாடகம் YMMA கிண்ணியா கிளை நடாத்திய நாடகப் போட்டியில் முதல் பரிசைப் பெற்றது. திருகோணமலை மாவட்ட பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நடைபெற்ற நாடகப் போட்டியில் இவரது "நாணயத்தின் இரு பக்கங்கள்" பாராட்டைப் பெற்ற நாடகமாகும். இந்நாடகங்கள் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாடகங்களாக அமைந்தன.

கிண்ணியா மத்திய கல்லூரி 25 ஆவது வருட வெள்ளி விழா நிகழ்வில் நகைச் சுவை நாடகமாக "வாங்க மாப்பிள்ளை வாங்க" என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டு பாராட்டுக்களைப் பெற்றது. இதன் கதை வசனம், நெறியாளுகை என்பவற்றுக்காக பரிசில்களும் கௌரவமும் இவர் பெற்றார்.

கிண்ணியா மறுமலர்ச்சி மன்ற மீலாத் விழா நிகழ்வுகளில் அதிக நாடகங்களை மேடையேற்றிய பெருமை இவரையே சாரும். இதில் "மேரே அல்லாஹ் மேரே றஸூல்" இஸ்லாமிய சமூகப் பின்னணியைக் கொண்ட சிறப்பு நாடகம் என இவருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

1. சீதனம் வேண்டுமா?
2. நீதியின் இரு பக்கங்கள்.
3. இம்மையும் மறுமையும்.
4. எல்லாம் நமக்காக.
5. தண்டனை (அரசியல் சமூக நாடகம்)
6. பிரார்த்தனை.
7. உமர் கையாம் (வரலாற்று நாடகம்)
8. அரசாட்சி.
9. அநாதை இல்லம்.
10. ஒரே வழி.

மேற்படி நாடகங்கள் தேசிய இளைஞர் சேவை மன்றம் மற்றும் கலாசார விழா நிகழ்வுகளில் மேடையேற்றப்பட்டு பாராட்டுப்பெற்றவையாகும். 1993 இல் சமூக நல கலை கலாமன்றம் சார்பில் "இரு பயணங்கள்" வீடியோ குறுந்திரைப்படம் தயாரிக்கப்பட்டு மினித் திரையில் பரவலாக வெளியிடப்பட்டது. இதன் திரைக்கதை, வசனம் நெறியாள்கை என்பவற்றுக்கு இவரே சொந்தக்காரன். இன்றும் எழுத்துலகில் மின்னும் ஹஸன்ஜி "இம்சை இளவரசன் திப்பு" எனும் அரசியல் வரலாற்று நகைச்சுவை உரைநடை சித்திரக் கதையை முகநூலில் எழுதிவருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

கிண்ணியா பிரதேச செயலகம் இவரது இலக்கிய நாடகப் பங்களிப்புக்காக 2008 இல் பிரதேச சாகித்ய விழாவில் "அரங்கத்தாரகை" எனும் பட்டமும் விருதும் வழங்கி கௌரவித்தது. இவரது இலக்கிய பங்களிப்புக்காக கலாபூஷணம் அரச விருதும் கலை கலாசாரத் திணைக்களத்தினால் 2014 இல் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவரது எழுத்தாக்கத்துக்காக மாவட்ட நூலக அபிவிருத்திக் குழு எழுத்தாளர் கௌரவிப்பு 2007 இல் விருது வழங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவித்தது. கிண்ணியா நகராட்சி சபை இவரது இலக்கியத் துறையில் கவிதைக்காக "கவிச்சுடர்" பட்டமும் வழங்கி கௌரவித்தது.

அதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் கலாசார திணைக்களமும் அதன் அமைச்சும் இணைந்து "வித்தகர் விருது" 2015 இல் வழங்கிய போது, இவருக்கு கலை "இலக்கிய வித்தகர்" என்ற விருதும் பட்டமும் பொன்னாடையும் அணிவித்து கௌரவிக்கப்பட்டார். இவ்வாறு இலக்கியத்தில் நாடகம் மற்றும் பல்வேறு துறையிலே பங்களிப்பு காணப்படுகிறது.

**கிண்ணியா அமீர் அலி** (நாடகப் பிரதி எழுதுதல், நடித்தல்)

கிண்ணியாவில் 1967.10.09 இல் பிறந்து வளர்ந்த கவிஞர் அமீர் அலி அவர்கள் இலக்கியப் பரப்பில் தனக்கான இடத்தைப் பதித்து, பல்வேறு துறைகளில் இலக்கிப் பங்களிப்புச் செய்து வருபவர். இவர் நாடகப் பிரதிகள் எழுதுவதிலும் நடிப்பதிலும் சிறந்து விளங்குகின்றார். ஆரம்ப காலம்தொட்டே பாடசாலை மற்றும் மீலாத் விழா போட்டிகளில் சமுதாய விழிப்புணர்வு நாடகங்களில் நடித்து பாராட்டைப் பெற்றவர். அதன் பின்னரான காலப்பகுதிகளில்

- ஒரு நாடகம் ஒளிபரப்பாகிறது.
- இது கொஞ்சம் வித்தியாசம்.
- இன்னும் நேரம் வரவில்லையோ?
- அந்தக் கறுப்புப் பூனை.

போன்ற நான்கு நாடகப் பிரதிகளை கிண்ணியா அமீர் அலி எழுதியுள்ளார்.

"ஒரு நாடகம் ஒலிபரப்பாகிறது" என்னும் நாடகம் 1988.11.08 இல் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பப்பட்டது. ஒரு வானொலிக்கு நாடகப் பிரதி எவ்வாறு எழுதுவது என்ற கருப்பொருளைக் கொண்டதாக இந்நாடகம் அமைந்திருந்தது. அழகான பாத்திரங்கள் ஊடாக நடித்து பல வாசகர்களின் பாராட்டைப் பெற்ற நாடகம் இதுவாகும். இந்நாடகம் இலங்கையின் தமிழ் முஸ்லிம் வானொலிக் கலைஞர்களான மஹ்தி ஹஸன் இப்றாஹீம், ஜெய்றஹீம் சகீட், நூர்ஜஹான் மர்சூக், எம்.எச்.எம். பௌசி, எம்.ஏ.எம்.சீ. குஷைன் பாரூக் போன்றவர்களின் நடிப்பில் உருவான நாடகமாகும்.

கிண்ணியா அமீர் அலி எழுதிய இரண்டாவது நாடகப் பிரதி "இது கொஞ்சம் வித்தியாசம்" இந்நாடகம் 1990 இல் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. ஆசிரியை ஒருவர் தனது படிப்புக்கு உதவிய ஒரு நாட்டாமையை திருமணம் முடிக்க விரும்புகிறார். நாட்டாமையோ படிக்காத நான் எப்படி டீச்சரை திருமணம் முடிப்பது என்று தனக்குள் கேள்விகளைக் கேட்கின்றான். அவனது நல்ல குணமே திருமணத்துக்கு வழிசமைக்க படியாமை ஒரு தடையாக இல்லை என்பதை உணர்த்துவதாக நாடகம் அமைந்திருந்தது.

இந்நாடகத்தில் கே.ஏ. ஜவாஹர், ஜெய்றஹீம் சகீட், பரீதா ஏ. இஸ்மாயீல் போன்றவர்களின் சிறப்பான நடிப்பும் அன்று வெளிப்படுத்தப்பட்டன. கிண்ணியா அமீர் அலி எழுதிய மூன்றாவது நாடகப் பிரதி "இன்னும் நேரம் வரவில்லையோ"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு கவிதை நாடகமாகும். வானொலி மக்கள் குரல் நிகழ்ச்சியில் அப்போது தயாரிப்பாளராக இருந்த ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் நெறிப்படுத்தலில் ஒலிபரப்பான நாடகமாகும். வயதான மூதாட்டி தேடியலைகிறாள். அவள் தேடியலைவது சமாதானத்தை. அதற்கான நேரம் இன்னும் வரவில்லை என்பதை உணர்த்தும் தொனிப்பொருளில் அமைந்த நாடகம் இதுவாகும்.

மேலும் இவர் எழுதிய நான்காவது நாடகப் பிரதி "அந்தக் கறுப்புப் பூனை" இது ஒரு நகைச்சுவை நாடகமாகும். இதுவும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டு பல வாசகர்களின் நெஞ்சத்தைக் கவர்ந்திருந்தது.

கிண்ணியா அமீர் அலி அவர்கள் நாடகப் பிரதிகள் எழுதியது மட்டுமல்லாமல் இரண்டு நாடகங்களில் நடித்தும் உள்ளார். 1988 இல் ஏ.எம். ஜபீர் எழுதிய "சூறாவளி" நாடகத்திலும் மற்றும் "வாழ்க்கைச் சக்கரம்" என்ற வானொலி நாடகத்திலும் தனது நடிப்புத் திறனை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் வானொலி இசை சித்திர நிகழ்ச்சிகளிலும் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது தலைநகரத்தில் வாழ்ந்து வரும் இவர் சக்தி தொலைக்காட்சி நடாத்திய **சக்தி ரத்னா சாதனையாளர் 2018** இல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2002 இல் கொழும்பில் உலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டிலும் கௌரவிக்கப்பட்டார். மேலும் பல்வேறு இலக்கிய அமைப்புக்களில் இலக்கியப் பங்களிப்புக்காக கௌரவிக்கப்பட்டுள்ளார். வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளினூடாக நாடறிந்த கலைஞராக இவர் வலம் வருகிறார்.

**எம்.ஏ. அக்பர் சலீம்** (நாடகப் பிரதி எழுதுதல், நடித்தல்)

மேலும் நாடகத் துறைக்கு பங்களிப்புச் செய்த இன்னொரு முஸ்லிம் கலைஞர் ஓய்வுபெற்ற அதிபர் எம்.ஏ. அக்பர் சலீம் ஆகும். இவர் கல்வி கற்கும் காலத்திலே மேடை நாடகத் துறையில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். மாணவராக இருந்த காலத்திலேயே "இது நீதியா" என்ற இஸ்லாமிய வரலாற்று நாடகம் மூலம் அறிமுகமானார். இந்நாடகம் மாவட்ட ரீதியிலான கலாசார போட்டி நிகழ்ச்சியில் முதலிடம் பெற்று 1970 இல் கிண்ணியா முற்போக்கு வாலிப மன்றத்தால் நடத்தப்பட்ட மீலாத் விழாவில் மேடையேற்றப்பட்டு முன்னாள் தகவல் துறை பிரதி அமைச்சர் மர்ஹூம் ஏ.எல். அப்துல் மஜீத் அவர்களின் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

தியாகம், சுல்தான் சலாகுத்தீன், திருந்திய உள்ளம், பாதை மாறிய பக்தாத் திருடன், அந்நியம் அடக்கப்படுகின்றது போன்ற வரலாற்று நாடகங்களையும், சிரிக்கும் சிலை, ஸ்பொட் லைட் போன்ற நாடகங்களையும் நெறிப்படுத்தி எம்.ஏ. அக்பர் சலீம் அவர்கள் மேடையேற்றியுள்ளார்.

2000 ஆம் ஆண்டளவில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையால் நடாத்தப்பட்ட போதைப் பொருள் தடுப்பு நாடகப் போட்டியில் இவரால் எழுதப்பட்ட "தண்டனை" எனும் நாடகம் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. 2008 இல் நகர சபையால் நடத்தப்பட்ட வீதி நாடகப் போட்டியில் இவரால் மேடையேற்றப்பட்ட நாடகமும் முதலிடத்தைப் பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாடகம் தி/கிண்/அல்-அதான் வித்தியாலய மாணவர்கள் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டு சேவா லங்கா நிறுவனம் மூலம் திருமலை மாவட்ட பாடசாலை களுக்கிடையே நடாத்தப்பட்ட கனிஷ்ட பிரிவுக்கான நாடகப் போட்டியில் இவரால் எழுதி மேடையேற்றப்பட்ட "சுவடு" எனும் நாடகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. சமூக நாடகம், வரலாற்று நாடகங்கள் என பல நாடகங்களை மேடையேற்றி நாடகத் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்து வரும் எம்.ஏ. அக்பர் சலீம் பல நாடக பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளார்.

2019 இல் கிண்ணியா பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த பிரதேச கலைஞர்களுக்கான நாடகப் பயிற்சியில் வளவாளராக கலந்துகொண்டவர். தனது பங்களிப்பை இன்றுவரை செய்து வருகின்றார். கிண்ணியா நகர சபை இவரது நாடகப் பங்களிப்புக்காக 2008 இல் "சமூகம்" எனும் மகுடத்தின் கீழ் கௌரவிப்புச் செய்யப்பட்டார்.

**இப்றாஹீம் முகம்மது மௌஜூத்** (நாடகப் பிரதி எழுதுதல், நடித்தல்)

1962.01.01 இல் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை கிண்ணியா மத்திய கல்லூ ரியிலும் கற்றார். தற்போது ஆசிரியராக கடமைபுரியும் இவர் படிக்கின்ற காலப்பகுதியில் "அறிவுச் சுடர் அணையாது" என்ற நாடகத்தில் மன்னன் கதாபாத்திரத்தில் வேடமேற்று நடித்து பாடசாலை மட்டத்தில் பலரது பாராட்டுக்களையும் பெற்றவர். மேலும் சிறுகதை, தொடர்கதை, கவிதைகள், ஓவியம் என்பவற்றில் தனது திறமைகளை வெளிக்காட்டுகின்ற அதேவேளை நாடகங்கள் எழுதுவதிலும் தனது பங்களிப்பை செய்துவருகிறார். கிண்ணியா மண்ணிலிருந்து வானொலிக்கு முதன் முதலில் "பாவத்துக்குச் சம்பளமா?" என்ற நாடகத்தை 1987 ஆம் ஆண்டு எழுதி ஒலிபரப்பப்பட்டபோது இவரது நாமமும் நாடக உலகில் பொறிக்கப்பட்டது.

இந்நாடகத்தின் கருப்பொருளானது பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு வைத்தியரின் வாழ்க்கையில் ஏற்படும் பரிதாப நிகழ்வுகளை சித்தரிப்பதாக அமைந்திருந்தது. அதைத் தொடர்ந்து 1988 ஆம் ஆண்டு "சந்தேக தீபம் அணைகிறது" என்ற நாடகமும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

தன் கணவன் மேல் சந்தேகம் கொள்ளும் மனைவியின் வாழ்க்கை எவ்வாறு சீரழிந்து போகிறது என்பதை கருவாகக் கொண்டு அமைக்கப்பட்ட இந்நாடகம் மீண்டும் கிண்ணியா மண்ணுக்கு பெருமை தேடி கொடுத்தது. இவர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருக்கும்போது அங்கு நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் "விடியும் வரை காத்திரு" என்ற சிறுகதையை எழுதி இரண்டாம் இடத்தைப் பெற்றார். இவ்வாறு இவரது இலக்கிய பங்களிப்புகள் இன்றும் விரிந்து காணப்படுகிறது. சிறுவர் பாடல்கள் எழுதுவதிலும் ஆர்வம் காட்டி வருகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிஜ்ரா வீதி, கிண்ணியா - 03 ஐப் பிறப்பிடமாகவும், பெரியாற்றுமுனை - 07 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட காணிதீன் பிர்தௌஸ் 1965.12.10 இல் பிறந்தார். 1994 ஆம் ஆண்டு கலாசாலை பயிற்சிக் காலத்தில் ஆசிரியர்களுக்காக மாகாணமட்ட நாடகப் போட்டியில் "போலி முகங்கள்" எனும் சமூக சீர்திருத்த நாடகமும், 1995 ஆம் ஆண்டு "போதை வஸ்து தடுப்பு" என்ற நாடகமும் மாகாண மட்டத்தில் முதலிடமும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடமும் கிடைத்தது. இது இவரது வழி நடத்தலால் பாடசாலைக்குக் கிடைத்த பெருமையாகும்.

கிண்ணியா கோட்டக் கல்வி பிராந்திய இஸ்லாமிய கலாசார வரலாற்று நாடகப் போட்டி 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற போது "உமர் முக்தார்" நாடகமும் 1997 ஆம் ஆண்டு நடைபெற்றபோது "வீரவேங்கை தாரிக்பின் ஸியாத்" என்ற நாடகமும் 1998 ஆம் ஆண்டு "சிந்து நதிக் கரையினிலே" மற்றும் "முகம்மது பின் காசிம்" எனும் இஸ்லாமிய வரலாற்று நாடகங்களும் முதன்மை இடங்களைப் பெற்றுக் கொண்டன. இந்நாடகங்களை இவர் எழுதி மேடை நாடகத்துறைக்கு அளப்பரிய பங்களிப்பை செய்தார்.

மேலும் நாடகத்துறையில் இம்மண்ணுக்கு குறிப்பிட்ட அளவு பங்களிப்புச் செய்த கலைஞர்களாக ஜனாப் ஏ.சீ. மஹ்ரூப் (இலங்கை பல்நோக்கு கூட்டுறவு சங்கம்), ஜனாப் ஏ.எம்.எம். லாபீர் (வெளிநாட்டு தூதுவர்), ஜனாப் ஏ.எம்.ஏ.றசூல் (ஆசிரியர்), ஜனாப் எஸ்.முகம்மது (அதிபர்), ஜனாப் எம்.எஸ்.எம். நஸார் (ஆசிரியர்), ஜனாப் ஏ.ஆர்.எம். நாஸர் (உதவி நில அளவையாளர்), மர்ஹூம் ஏ.ஆர்.எம். தமீம் (நகர சபை), ஜனாப் ஏ.ஆர்.எம். ஹுஸைன் போன்றவர்களைக் குறிப்பிட்டு சொல்லலாம்.

**பரிந்துரை**

கிண்ணியாவில் வாழும் நாடகக் கலைஞர்கள் தமது தனிப்பட்ட தொழில் நிமித்தம் கால ஓட்டத்தில் தூர ஒதுங்கியிருந்தாலும் இவர்கள் ஒன்றுகூடி மீண்டும் புதிய நாடகப்பட்டறைகளை அமைத்து, கலைஞர்களை உருவாக்குவதிலும் அவற்றை வளர்ச்சியுறச் செய்வதிலும் இன்றைய தேவைப்பாடு அத்தியவசியமாகவுள்ளது. இதன் மூலம் தூர்ந்துபோயிருக்கும் இந்தக் கலைப்பணி சமூக கலை கலாசார மேம்பாட்டை வளர்ப்பதில் ஒரு புதிய யுகத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உசாத்துணை நூல்கள்**


- கௌரவிக்கப்பட்ட சமூகம் (2008), நகர சபை மலர்.
- கிண்ணியா பிரதேச செயலக சாகித் விழா மலர் - 2007.
- அரச விருது விழா (கலாபூஷணம்) - 2014.
- கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் வித்தகர் விருது விழா மலர் - 2015.


●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்பதித்த மூத்த கவிஞர்கள்

## என் உயிரான உம்மா

கலாபூஷணம்
பி.எம்.எம்.ஏ. காதர்

மண்ணறைக்குள் உங்களை வைத்து
மண்போட்டு மூடிய போது
கண்களில் நீர் வடிந்து
கரைந்தது மண்குவியல் உம்மா.

கருவறைக்குள் என்னைவைத்து
கவனமாய் பணிகள் செய்து
உருப்பெற இறைவனிடம் வேண்டி
உயர்வாக என்னைப்பெற்றீர்கள் உம்மா.

உதிரத்தால் உணவு ஊட்டி
உண்மை அன்பால் தாலாட்டி
பசித்திருந்து தனித்திருந்து விழித்திருந்து
பத்திரமாய் வளர்த்தீர்கள் உம்மா.

ஆண்டுகள் அறுபத் தைந்து
அவனியில் நான் வாழ
வேண்டுதல்கள் பல செய்து
என்னை வாழவைத்தீர்கள் உம்மா.

தன்னை அழித்து தினம்
என்னை வளர்த்து நல்ல
பிள்ளையாய் நான் வாழ
வழிசெய்தீர்கள் அன்பு உம்மா.

வறுமையிலும் சிதைந்து விடாமல்
தினம் பொறுமை காத்து
மறுமை வாழ்வுக்காய் தொழுது
மண்ணறைக்கு நன்மைசேர்த்தீர்கள் உம்மா.

மண்ணறைக்குள் நீங்கள் நல்ல
மகிமையுடன் வாழ்ந்து மறுமையில்
சொர்க்கத்தில் இடம் பிடிக்க
இறைவனிடம் பிரார்த்திற்கின்றேன் உம்மா.
●

*எனது தாயின் மறைவின் ஓராண்டு நிறைவையொட்டி எழுதப்பட்ட கவிதை இது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சரி கவிதைகள்

# இதுதான் வெண்ணிலா!

**வா**னத்தில் வராத வெண்ணிலவு
வஞ்சியர் கைகளால் தொடும்நிலவு
ஆணவம் கொண்ட மாந்தரை திருத்தி
அறிவுக்கண் திறக்கும் வெண்ணிலவு.

புதுப்புதுக் கதைகள் சுமந்து வரும்
பிள்ளைகள் கல்விக்கு கைகொடுக்கும்
மதுச்சுவையான கருத்துகள் தந்து
மங்கையர் உயர்வுக்கு வழிகாட்டும்.

காலாண்டுக் கொருமுறை மலருமிது
காதல் கதையெல்லாம் சொல்லுமிது
பாவலர் நாவலர் ஆக்கங்கள் சுமந்து
பகுத்தறி வென்பதைத் திறக்குமிது.

மானங்காக்க துணிகள் நெய்யும்
மருதமுனை ஊரின் குழந்தையிது
தேனின் சுவையில் கவிதைகள் தந்து
திரும்பத்திரும்ப நம்மை படிக்கவைக்கும்.

புலவர்கள் கவிஞரை வானுயர்த்தும்
புத்தாக்கம் பலதும் சுமந்து வரும்
அழகிய முன்னட்டைப் படத்துடனே
ஆக்கங்கள் தருமிந்த வெண்ணிலவு

சேர சோழ பாண்டியனின்
தியாகத்தால் வளர்ந்த செந்தமிழின்
பாரிய சரிதை நாமறிய
படித்திட உதவும் வெண்ணிலவு

அம்பிகாபதியின் காதல் கதை
அமராபதியின் சோகக் கதை
தம்பியால் அரசிழந்த குமணன்கதை
சகலதும் தருமிந்த வெண்ணிலவு

முன்னாள் வங்கி ஊழியரின்
முயற்சியால் கிடைத்த முத்திதுவாம்
அன்னை தமிழின் அழகுகண்டு
அகிலம் வியக்க வைத்திடுமாம்.

வெண்ணிலா மங்கை விரிவடைய
விதம் விதமாக வளர்ச்சி பெற
பொன்னான வாசகர் ஒன்றிணைந்து
புதுவழி காட்டிக் கைகொடுப்போம்.

•

**– அலியார் T.O. (சம்மாந்துறை)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பு மனிதர்கள்!

தொட்டு உணர முடியாதபடி
மனித இடைவெளியாய்
தொலைவில் எரிகிறது.

நெருப்பைப் புதைப்பதில்லை
மடிக்குள் அள்ளி நிறைத்திருக்கிறான்
மனிதன்!

பாதங்களின்றி இருப்பதால்
யாரையும் தேடல் கொள்வதில்லை
நெருப்பு.

நெருப்பினை முற்றத்தில்
நாம் வைத்திருப்பதில்லை
நெருப்பு வீரியங்கொண்டால்
பூட்டினை எங்கு தேடுவது?

நம் தாகத்தை ஒருபோதும்
அணைப்பதில்லை
எரி நெருப்பு.

நீயும் நெருப்பும் ஒன்றுதான்
இரண்டிலுமே இதயம் இல்லை.

இன்றைய கணத்தில்
நெருப்பு மனிதர்களைக் கண்டேன்
தலையில் முளைத்த நெருப்பை
சிலர் அணைத்துக் கொண்டிருந்தனர்.

●

**– மருதமுனை விஜிலி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாசத்தில் நீ...

மழைத்தூறல் போல் மனதைத் தழுவுகிறாய்
மாரிக்கூதல் போல எங்கிலும் கவிகிறாய்
இரையும் கடலாய் என்னுள்ளே இருக்கிறாய்
இனிப்பான தேனீராய் தொண்டைக்குள் இறங்குகிறாய்

வீசும் தென்றலாய் மௌனமொழியில் பேசுகிறாய்
வீழும் அருவிபோலே கவிதை தருகிறாய்
இருட்டிய வானம் போல் சில நேரம் அமைதியாக
இசைக்கும் வண்டாய் இன்பத்தின் பேரணியாக

மனதுக்குள் மறைந்து
பிறைபோலப் பூக்கிறாய்
பொங்கும் புதுப்புனலாய்
அன்பைப் புனைகிறாய் - அன்பே

காதலின் பாடங்கள் குயிலெனவே
கணக்கில்லாமல் நடத்துகிறாய்
காத்திருப்புக்களையே யாழின்
சுரங்களாய்ப் பொழிகிறாய்

இடைவெளிகள் இருந்த போதும்
இமையாய் இணைந்து இருக்கிறாய்
நொடிப் பொழுதும் காற்றலை போல் சுவாசத்தில் நீ....
இணையத்தால்... இணைந்ததால்...
●

– Dr. ஜலீலா முஸம்மில் (ஏறாவூர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மா!

அம்மாவுக்கு வயது எழுபத்து நான்கு
அழகிய தோற்றம் என் அம்மாவுக்கு
ஒல்லி யானாலும் ஓடாய்த் தேயவில்லை
ஒரு நாளும் நோயும் வந்ததில்லை
ஒரு நாளில் ஒளடதமும் பாவித்ததில்லை

ஆசைக்கும் அறிவுக்கும் என் அம்மா
அமைதிக்கும் அடக்கத்திற்கும் என் அம்மா
பண்புக்கும் பணிவுக்கும் என் அம்மா
பக்திக்கும் பாசத்திற்கும் என் அம்மா
பொறுமைக்கு பொக்கிஷம் என் அம்மா

விருந்தினரை அன்போடு வரவேற்று
வீதிவரை சென்று வழியனுப்பி
உறவுகளை ஒன்று சேர்க்க
ஊக்கத்துக்கு முதலிடமளித்தாய்
ஊரார் உன்னை போற்றி மகிழ்ந்திடவே

அறிவுரைகள் பலவகை கூறிடவும்
ஆசையோடு கூடிப்பேசி மகிழ்ந்திடவும்
இல்லறத்துக்கு ஏற்ற இல்லத்தரசியாம்
ஈடு இணையில்லா அன்புத் தெய்வமாம்
பாரினிலே வாழ்த்திட என் அம்மா!

●

– த. நடேஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ கவிதைகள்

நதியோரக் கட்டிடங்கள்
சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்றன
சிவப்பு நிறப் படகுகள்

வீட்டுத் தோட்டம்
உடலுக்கு ஆரோக்கியம் தருகிறது
இயற்கை உணவு

மரத்தின் கிளை
மெல்ல மெல்ல அசைகிறது
பறவை

மேய்ந்த ஆடுகள்
விரைவாக முன்னோக்கி நகர்கின்றன
இடையனின் கால்கள்

குட்டிக் குரங்கின் விளையாட்டு
தொடர்ந்து கொண்டே இருக்கிறது
தாயின் கண்காணிப்பு

பறவையின் கூடு
மெல்ல அசைகிறது
மரத்தில் நிழல்

நண்பர்களின் நட்பு
தெளிவாகத் தெரிகிறது
ஒற்றுமை உணர்வு

நீர் நிலை
கவனத்தை ஈர்க்கிறது
வளைந்து செல்லும் பாதை

மலர்களின் அழகு
உள்ளம் கவர்கிறது
நுகரும் அணில்

நள்ளிரவுக் குளிர்
உடலை அசைக்கிறது
தூக்கத்தில் வரும் கனவு

# தன்முனைக் கவிதைகள்

நோயை உருவாக்கும்
புகையிலை பழக்கம்
தீங்கை உணர்ந்து
தவிர்ந்து கொள்வோம்

காதல் நினைவுகள்
இனிமையாக இருக்கிறது
இல்லற வாழ்க்கை
வெறுப்பாக இருக்கிறது

அலட்சியம் தவிர்ப்போம்
இலட்சியம் வெல்வோம்
இலக்கை அடைந்து
மகிழ்ச்சி காண்போம்

மௌனம் என்பது
இனிய பண்பாகும்
துயரம் மறக்க
சிறந்த மருந்தாகும்

பேராசை கொள்வது
அழிவை விதைக்கும்
அளவான ஆசை
வாழ்வை வளமாக்கும்

கல்வி கற்பது
பயன் தரும்
குடும்ப வறுமை
தூர விலகும்

தொடர் மழை
வெள்ளமாக மாறும்
பெருத்த அழிவைத் தந்து
நிம்மதியைக் கெடுக்கும்

மஞ்சள் வானம்
மனதைக் கவர்கிறது
மாலைச் சூரியன்
ரசிக்கும் படியாக இருக்கிறது

**– நழீம் ஹனீபா (ஒலுவில்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றிற்று பிணமாய்...

இயலாதவர் புறந்தள்ளி
இயலுமைகள் தலைநிமிரும்
இமைக்கா நொடிகளிவை.
இனங்காட்டும் விகாரமாய்...

உன்னில் பெரியவனாம்
உறவில் நஞ்சூட்டியே
உணர்வை கொச்சைப்படுத்தி
உயிரை எடுக்கும் காலனாய்...

பால்யம் கனக்க
பாசாங்கு கிளைபரப்பி
பார்த்திடாத காலங்கள்
பார்த்தெழும் விதியாய்...

வறுமை பாட்டிசைக்க
வந்ததங்கே வசந்தங்கள்
வாலிபங்கள் மடிதனிலே
வக்கிரங்கள் வகைதொகையாய்...

தேற்றுதல்கள் தேடாமலே
தோற்றலையும் மானிடா
தோண்டிய குழியாய்
தோற்றிற்று பிணமாய்...

●

– திருமதி. S. ஹஸீனா ஆதம்பாவா BA (Hons)
ஆசிரியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுத்தான் பாரேன்...

## 1.

நலன் கேட்டிடல் எல்லாம்
அத்தனை பெரிதல்ல...
யாரும் யாரையும் கேட்கலாம்...
ஆனால், இப்பொழுதெல்லாம்
யாரும் யாரையும்
கேட்டுக்கொள்வதில்லை...

அருகேதானே இருக்கிறார்.
நல்லா தானே கதைக்கிறார்.
சிரித்துக்கொண்டே தானே
இருக்கிறார்.
பேச்சில் மாற்றமே இல்லையே...
எப்போதும் போலத்தான்
வித்தியாசமில்லை...

ஆக,
நலமாகத்தான் இருப்பார்...

கேள்வியே கேட்கப் போவதில்லை...
அவர்களாகவே பதில்
இதுவென்று எண்ணிக்கொண்டிடுவர்.

ஒரு முறை கேளுங்களேன்...
அவர்கள் விழிகளில் நீர்
திரண்டு அணை உடைக்கும்...
அவர்கள் பொய்கூற முனைய
அவ்விதழ்கள் நடுங்க
பற்கள் அதை கடித்து
தடுக்க முயற்சிக்கும்...

என் தலை கோதேன்...
கெஞ்ச மனம், தலை தாமாய்
நலம் என்பதாய் அசையும்...

அப்படியே தலை கோத வந்திட
அப்படியே அந்த தோளில்
சாய்ந்து அழும்...
எதற்கென்றே தெரியாது
அவ்வழுகை நில்லாமல்
பொழியும்...

ஏதோ பெரும் சுமை
இறக்கியதாய் தலை நிமிர்ந்து,
தன் கைகளே அழுந்த
கண்களை துடைத்து பின்னே
ஒன்றுமே நடவாததாய்
உம் நலம் கேட்கும்...

அவ்வளவுதான்.

இதுவே கேட்கப்படும் நலம்
அலைபேசி வழியாய்,
குறுந்தகவலாய் கேட்டிட
நன்றிகள் சொல்லும்...

நலன் கேட்பதில் என்ன நன்றி...?
கேட்டதினாலேயே அவள்(ன்)
நலன் கொள்கிறாள்(ன்)
அவ்வளவே...

உணர்ந்ததுண்டா...?
நிகழ்வுகள் எதிர் கொண்ட
நினைவுகள் வருவதுண்டா...?

ஓரிரு வார்த்தைகள்தான்
ஆனாலும் அவை மனங்களை
உயிர் வாழச்செய்யும்...
யாரும் யாராகியும்
யாரிடமும் கேட்க கூச்சமில்லை...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இமையி.

அவர்கள் மனங்களை
இலகுவாக்கிய நன்
உம்மை சேரும்...
யாரோவாய் இருந்தும்
கேட்கப்படும் நலம்
உடன் கொண்ட யாவரையும்
மிகைக்கும்...

அவ்வளவே...

## 2.

நலன் கேட்பதில்
என்ன இருக்கப்போகிறது...?

வறுமை என்றிட,
பணம் கொடுக்கவா
போகிறாய்?

வலி என்றிட மருந்திடவா
போகிறாய்?
இல்லை தான்.

கேட்டுப்பாரேன்...

அழைப்பினூடே
உன் மடிசாயவா கேட்பாள்(ன்)...

பேசேன்...
மனம் இதமாகும்
கூறுவாள்(ன்)...
அருகில்லை என்றாலும்
அருகாமை உணருவாள்(ன்)...
கையணைவை உணர்வாள்(ன்)...

உணர் நீயும்
அங்கே
உணர்வுகளுக்கே உயிர்...

உண்டாயோ...?
கேட்டிட நீயும்
இல்லை என்றிட அவளு(னு)ம்,

கொடுக்கவா போகிறாய்...
இல்லை தான்...

கேட்டுத்தான் பாரேன்...

கேட்பதில் அவள்(ன்)கள்
பசியாருவதை உணர்வாய்...

கண்களில் நிறைவை
காண்பாய்...

அன்பென்றிடல் இதுதானே...

கொடுக்க ஒன்றுமில்லை
என்றே நீ நினைக்க...

உன் ஒற்றை வார்த்தை
கொடுக்கும் மொத்தம்
அவளு(னு)க்கு...

உணர்த்தும் மொத்தம்
உயிரே நீ என்று
அவளு(னு)க்கு நித்தம்...
●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமை... துயரல்ல!

பொறுத்துப் பொறுத்து
பொறுத்து வாழ்ந்த வாழ்வில்
சிறுத்துக் கிடக்கும் நிகழ்வுகள்
சிறிதல்ல!

மனதை
உறுத்தும் வலிதனை
ஒதுக்கி வைத்துவிட்டு
ஒருவழியாய்... நேர்வழியாய்...
ஒருத்தனாய் பயணம் செல்கையிலும்
சுகமிருக்கிறது ஒருவிதமாக.

கசப்பான அனுபவ சகதிக்குள்
கால்களைப் புதைத்து நடந்ததன் பின்புதான்
உவப்பான சிந்தனைகள்
ஊற்றெடுப்பனவாய் அமைகின்றன
ஒருமித்து என்னுள்!

வாழ்வு தனித்தாகிலும்
செல்லும்வழி இருட்டாகிலும்
சிறுமைப்பட்டே... சிரித்துநட!
ஒரு புள்ளியிலாவது
உனக்கொரு வழி விலகும்.

●

**– அலெக்ஸ் பரந்தாமன் (புதுக்குடியிருப்பு)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா!

வெண்ணிலா நீ என் நிலா
கதைகள் சொல்வேன் உன் நிலா
கவிதைகள் தருவதும் நீ நிலா
கவிஞரின் உள்ளத்து பூத்த நிலா
களைப்பின்றி ஓடும் ஒரு நிலா,

பட்டாடை உடுத்திய பா நிலா
தெவிட்டா தமிழ் அமுதே நிலா
தென்படும் நீ மட்டும் எம் நிலா
உயிரோடு உறவாடும் உரு நிலா
ஊரான மருதத்தின் தேன் நிலா,

காதோரம் கரையும் கார் நிலா
கம்பன் போலவே கலை நிலா
பல காலம் இசைபாடும் பால் நிலா
உனை எனதென்பேன் மண்ணிலா
புதுமைகள் காண்பேன் உனதிலா,

கலைஞர்கள் மனது பொன் நிலா
கைகளில் தவளும் கார் நிலா
அணைத்தே ஓடிடு அற நிலா
பொல்லான் வசைதீர் முழு நிலா
பொறுமை காத்திடு வெண்ணிலா.

●

**— கவிப்பொய்கை ஜவ்சன் (மருதமுனை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை எழுதுங்கள்.

காடுகள் மலைகள் தாண்டிக்
கவிதைகள் பிறப்ப தில்லை.
கோடுகள் போட்டுக் கவிதைக்
குழந்தைகள் சிரிப்ப தில்லை.
வீடுகள் முழுக்கக் கவிதை
விதைப்பதில் பயனு மில்லை.
ஏடுகள் காணும் போதே
எழுதுதல் அர்த்தம் தாங்கும்.

பேருக்கு எழுதும் கவிதை
பதராகிப் பறந்து போகும்.
ஊருக்கு விலாசம் காட்ட
உரைத்திடும் கவிதை மாளும்.
ஆருக்கும் கவிதை எழுத
அழகுறு தமிழே போதும்
வேருக்குள் பாயும் சொற்கள்
விதைத்திட வேண்டும் தேடி.

கனவானைப் பாடும் கவிதை
கலைந்திடும் காலம் தாண்ட
இனவாதம் மொழியில் தருதல்
இங்கித மில்லை குற்றம்.
மனத்தோடு முரணும் யாவும்
மறையாமல் பேணக் கவிதை
சினத்தோடு சொற்கள் கோர்த்தால்
சிலையாகும் அசையா நிற்கும்.

காட்டாறு போலப் பரவிக்
கவிதைகள் பாய வேண்டும்.
கூட்டுக்குள் இருந்து கொண்டு
கூவிடும் கவிதை எதுவும்
பாட்டுக்கள் உலகில் வாழப்
பொருத்தமே யில்லை சொற்கள்
மாட்டுங்கள் மொழியில் செம்மை
மறைந்திடாக் கவிதை எழுதும்.!

•

**– சம்மாந்துறை மஷூறா (மருதமுனை)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டிய கதவுகள்.

இருட்டு அறையில் இரம்மிய நாடகம் போடுகிறாள்
அழுது அழுது பிதுங்கிய விழிகள்
ஏங்கி ஏங்கி தவித்த இருதயம்!

ஓர் ஓரமாக
பூட்டிய கதவுகளுக்கு இடையே
புல்மேய்ந்து கொண்டிருக்கிறது ஏக்கம்!

எட்டுமா வெளிச்சம்
தட்டுமா கதவு என்று
ஏக்கங்கள் மட்டும் ஏணிப்படியாக!

அவள் காமவெறியர்களின்
பார்வைக்கு அகப்பட்டவள் தானோ?
தவிக்கின்றாளே!

அழுகுரல் ஆண்டோன் பாதத்தில்
அடிமைச் சிறையானதோ?
இவள் ஆயுள் கைதியோ!

நிராயுதபாணியோ அல்லது
பல நாசக்காரர்கள்
தீண்டப்பட்ட திக்குமுக்காடிய நெஞ்சக்காரியோ!

பூட்டிய கதவிற்கு
திறப்புக் கோர்வை
தேடுபவள் இவள்!

●

**– எண்ணக்கவி நவ்ஷாட் நஸ்கா (புஸ்ஸல்லாவ)**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அம்மா பேரன்பின் உறைவிடம்

கருவறை இருளில்
கண்மூடிக் கிடந்தாய்
வெளி உலகு காண
காலம் கனிந்ததும்
கண்திறந்தாய்

தாளிட்ட கதவை
முட்டி மோதி தட்டி நீ
திறந்தபோது மென்சவ்வு
கிழிந்து பனிக்குடம்
உடைந்து இடுப்பெலும்பு
விரிவடைய உயிர்வலி
உணர்ந்தேன்

குருதிச் சேறாடி வழுவி
நீ வந்து குழந்தையாய் விழுந்தாய்
தாதியர் நீராட்டி சீர்செய்து
தாய் என்பக்கம் உனைக்காட்ட

நிலவை தோற்கும் உன் முகம்
பார்த்து உயிர்வலி மறந்தேன்

மீண்டும் ஒருமுறை உலகில்
உன்னுடன் நானும் புதிதாய்ப் பிறந்தேன்.

•

– மருதூர் மௌஜுன் (மருதமுனை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பிரார்த்தனை

என் தவறுகளை
மன்னிக்க முடியாதவர்களை
என் குறைகளை
ஏற்றுக்கொள்ள முடியாதவர்களை
என் கோபங்களை
பொறுத்துக்கொள்ள முடியாதவர்களை
எனக்கு செய்தவைகளுக்கு
பதிலாய் நன்றிக்கடனை எதிர்பார்ப்பவர்களை
என்னை இன்னொருத்தருக்காக இலகுவாய்
விட்டுவிடுபவர்களை
என்னை அதிவிரைவாக மறந்து விடுபவர்களை
என் அன்பை அத்தனை முக்கியமான
ஒன்றாக கருதாதவர்களை
சிறியதொரு மனக்கசப்பில் மொத்தமாய் என்னை
மறுதலித்தவர்களைத்தான்

இன்னும்
என் வாழ்நாள் முழுவதும்
தவிர்க்க முடியாமலும்
மறக்க முடியாமலும்
தள்ளாடிக்கொண்டிருப்பது

கடனாயென்றாலும் வேண்டிநிற்பது
எப்போதும் எனக்கு உங்களால்
இலவசமாய் தரமுடியாமல்போன
அன்பினைத்தான்

உங்கள் சாத்தப்பட்ட கதவிற்கு பின்னாலிருந்து
இன்னும் கேட்கும்
குரல் என் ஆன்மாவின்
பிரார்த்தனையேதான்

காது கொடுங்கள்..

●

**-மயிலிறகு மனசு ஷிபானா அஸீம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய கவிதை

ஒத்தையடி பாதையில
காத்திருக்கேன்
வாடிபுள்ள...

ஆண்:

ஒத்தகண்ண ஆடவிட்டு
ஒத்தையிலே போறவளே

ஒத்தயடி பாதையிலே
காத்திருக்கேன் வாடிபுள்ள

இரட்டஜட ஆடையிலே
இரண்டுவிழி மூடுதடி

கண்ணிரண்டில் கனவுவந்து
காவியமே சொல்லுதடி

தூக்கமெல்லாம் செத்தபின்னே
ஏக்கம்தான் கொல்லுதடி

கைக்குள்ள சிறைவைக்க
மனசெல்லாம் துள்ளுதடி.

●

அந்தி சாயும் வேளையில
அக்கரைக்கு
வாங்கமச்சான்...

பெண்:

ஒத்தவேட்டி மடிச்சுவச்சு
மொத்தமனச துடிக்கவச்ச

கருப்புஉதட்ட பிரிச்சுவச்சு
எப்படித்தான் சிரிச்சுவச்ச

கிராப்பு பார்க்கையிலே
மாராப்பு குத்துதய்யா

நெஞ்சுமயிரு நினைப்பில
நெஞ்சுகுழி வேகுதய்யா

உச்சியெல்லாம் பூவச்சேன்
உச்சிவெயில் போயிருச்சு

அந்திசாயும் வேளையில
அக்கரைக்கு வாங்கமச்சான்.

●

– ரிஹானா ஹரிஸ்கான் (கண்டி–தெல்தோட்டை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிச்சலனத்திற்கு முன்

நான்
ஒரு மரம் நட்டு வைக்க வேண்டும்

உறவுகளென்ற
போலி அடையாளச் சிக்கல்
கைவிடும் போது கை கொடுக்க
ஒரு மரம் நட்டு வைக்க வேண்டும்

என் சிறகு தேய்ந்து நினைவுகளைப்
பருகி வாழும் நாட்களில்
பசி உராய்ந்து பொறி கிளம்பும் போது
நான் நட்ட மரம் பழம் தரும்

என் வேகம்
நிச்சலனமாவது கண்டு
நான் நிழலும் சுவடுமற்றுப் போகும் வரை
கிளை நீட்டி ஆற்றுப்படுத்தும் அம்மரம்

"நான்" என்ற தீயணைந்து
வெறும் சுழியமாகும் போது
சாய்ந்து கொள்ள தன்வேரில்
தலையணை செய்யுமது

பிள்ளைகள்
கை நீட்ட மறுக்கும் காலத்தில்
முனகலை துணைக்கழைத்து
குந்தியெழும்ப தன் கிளையுடைத்து
ஊன்றுகோல் தரும் மரம்

தனித்தலின் சூன்யத்தில்
மனம் அவிழ்ந்து
மடையுடைதலில்
மாலைக்காற்று வந்து வருட
சருகு சொரிந்து தலை தடவ
ஒரு மரம் நட்டு வைக்க வேண்டும்

அது
அந்திமத்தின்
முரட்டுப் பிரவாகத்தின்
ஆறுதற் குடையாகும்.

•

**-முகமட் றாபி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரைக் காட்சி

காலையில் எழுந்த நான்,
கடற்கரைக்குச் சென்றேன்.
கண்ட காட்சிகளை,
கண்கள் மறக்கவில்லை.

அடிவானில் சூரியன்,
அழகாகத் தோன்றினான்.
பந்து போன்ற சூரியனை,
பார்க்க ஆசை மிகுந்தது.

நடுக்கடலில் கப்பலொன்று,
நளினமாகச் சென்றது.
கப்பலின் அழகது,
கண்ணதனைப் பறித்தது.

மீனவர்கள் வலையிழுத்து,
மீன் பிடித்துக் குவித்தனர்.
குவித்திருந்த மீன்களெல்லாம்,
குத்துக் கரணம் அடித்தன.

நண்டுகள் பொந்திலிருந்து,
நடனமாடி வந்தன.
நான் அதனின் அருகில் செல்ல,
நளின மாகச் சென்றன.

அலைகள் வந்து கால்களை,
அரவணைத்துச் சென்றன.
அலை அலையாய் வந்த அலை,
ஆனந்தத்தைத் தந்தன.

இதமான கடற்காற்று,
இங்கிதத்தைத் தந்து,
இறையவனின் அருளதனை,
எடுத்தியம்பிச் சென்றன.

சிறுவர்களின் விளையாட்டு
சிந்தையினைக் கவர்ந்து,
பாடி யாடி சிறுவர்கள்
பந்தடித்து மகிழ்ந்தனர்.

-ஏ. ஆர். அப்துல் றசூல்.
ஓய்வுநிலை அதிபர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியமும் கல்வியும் இரு கண்கள்

கலையினூற்று அருந்தமிழின்
கல்வி கேள்வியா விலுமே
நிலைக்கும் பேறாய் சமுகத்தில்
நித்தமுழைத்துக் காத் தெம்மின்
அலையும் வாழ்விலமைதி தரும்
அரியவறிவுகள் தினம் வளரும்
சிலையாய் நெஞ்சில் பதிந்தென்றும்
சீரியபாதை தெளிவு தரும்

கல்விச் செல்வம் பெற்றோரும்
கலை நற்பணியை யுடன்கொண்டால்
நல்லோ ராற்றல் மேலுற்று
நன்மை நூற்கள் இயற்றித்தமிழ்
கல்லார் தமக்கும் கலைப்பணியின்
கவனம் பெறவே யுழைத்திட்டால்
சொல்லும் கல்வி கலைபலவும்
செகத்தில் விதைத்துப் பணியீவார்.

உலக மொழியாம் தமிழ்த்தாயின்
உவந்து கல்வி வளர்ந்தோங்க
நலவாம் கலையின் பாதைகளாம்
நாடகம் கவிதை கட்டுரைகள்
நிலவும் வாழ்வின் சிறுகதைகள்
நாட்டின்முன் கலை வடிவங்களும்
பலமா யூக்கிக் கல்வியுடன்
பருகும் சிறியோர் சிறப்புறுவர்.

வாழ்வும் கலையு மொன்றாகும்
வகைசேர் கல்விப் பாதையதாம்
ஆழ்ந்த புலமையதன் ஆற்றல்
அறிந்து கற்றோர் சிறப்புற்றார்
பாழ்தீ வழியிற் செல்லாது
பண்பை யூக்கிக் காக்கின்ற
சூழ்ந்த பல்வகைக் கல்விபெறின்
சுகமாம் கலையு முருவாகும் .

வாலிபர் தீதின் வழிசெல்லா
வளமோர் கல்விச் சிந்தையுடன்
போலிப் பாதை நாடாது
பொங்கு முணர்வைக் கலைகளினை
வேலியதுவாய்த் தொடர் வாரேல்
வீணோ ராகாப் பணிசெய்து
பாலையில் நிழலாய் மகிழ்வுற்று
பதியிற் சிறந்தோ ராகிடுவர்.

அரிய கலையின் வடிவங்களில்
அருகிடா யிலட்சியப் பயன்பெற்று
விரிந்த கல்விப் பாதைகளில்
விளையும் சிறுவர் தொடர்ந்தேகி
சீரிய வாழ்வில் பயன்பெற்று
சிறப்புற் றோங்கிப் பணிசெய்ய
நேரிய பாதை கலைகல்வி
நிதமும் உணர்த்தி வாழ்விப்போம் .

**– மருதூர் ஜமால்தீன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன இலாபம்

கிரணங்கள் தனைப்பரப்பும் கதிரோன்என்றும்
கிழக்கினிலே உதிப்பதிலே மாற்றமில்லை
இரவினிலே வருகைதரும் அம்புலிதன்
இயல்பினிலே ஒருபோதும் மாற்றமில்லை
சுரந்தளிக்கும் முலைகளதோவழங்கும் பாலை
சொல்லிடலாம் மீண்டும் அவைஏற்பதில்லை
நிரந்தரமில்லாததெனும் வாழ்வை யேற்று
நிலம்வாழும் மனிதர்களில் உண்டேமாற்றம்!

காட்டிலுறை பறவையினம் அவைகள்போலும்
கணக்கற்ற விலங்கனைத்தும் கவலையற்று
ஓட்டிடுதே வாழ்நாளை அவைகள்வாழ்வில்
ஒற்றுமைக்கு எந்நாளும் பஞ்சமில்லை
மாட்டினிலும் கீழாக மதிதான்கெட்டு
மாந்தர்களே வாழுகின்ற நிலைமைநெஞ்சில்
மூட்டிடுதே துயரத்தை சோகம்தன்னை
முடிவுபெறச் செய்வதற்கு என்னமார்க்கம்?

செம்மைநிறம் குருதியென்று செப்பிவைத்தார்
செகம்வாழ்வோர் சமனென்று ஒப்பிவைத்தார்
இம்மையிலே ஒருவாழ்வு உண்டேயென்றார்
இறையுலகு மறுமையென இயம்புகின்றார்
அம்மம்மா இனத்தோடு மதத்தைகூட்டி
அவர்தானே சாயங்கள் பூசுகின்றார்
செம்மைவழி வாழ்ந்திடு நல்நோக்குமின்றி
சீரழிவை நாடுகின்றார் வெட்கக்கேடு!

ஆறறிவு பெற்றிருந்தும் அலகைபோலும்
ஆமிவர்கள் வாழுகிறார் மனிதரானோம்
பேறிதுதான் என்பதனை எண்ணிடாமல்
பிரிவினைக்கும் பிரச்சனைக்கும் நண்ணுகின்றார்
கூரியநல் ஆயுதத்தால்நெஞ்சம் தன்னைக்
கூறாக்கும் வார்த்தைகளால் குத்துகின்றார்
பாரில் இவர்சேவைகளை பகர்தல்எங்ஙன்
பகுத்தறிவு பெற்றிருந்தும் என்னஇலாபம்!

●

**– கவிமணி அ. கௌரிதாசன் (கிண்ணியா)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜகவியின் பொன் துளிகள்

- குடிசைப் பாத்திரங்கள்
  நிரம்பின
  வெளியே மழை.

- தாகத்தோடு
  விற்கிறான்
  "ஐஸ் கிரீம்"

- கொல்லன்
  மனசு
  பூ.

- உலோபி வீட்டில்
  வற்றிக் கிடந்தது
  கிணறு.

- இரசித்தான்
  குருவி கீச் கீச்சை
  வயலின் வாசித்தவன்.

- முகம் மலர்
  கைக்குட்டை
  வண்டு.

- விளக்கு அணையும் போது
  அணைக்கிறது
  இருள்.

- கல் விழுந்தாலும்
  கூடு கலையாது
  ஞானி.

- காகிதத்தில்
  உதிர்ந்து கிடக்கிறது
  எழுதுகோல் உயிர்.

- கடன்
  உழவன் சாப்பிடுகின்ற
  அரிசி.

- ஏழையை
  உண்கிறது
  பசி.

- அரிசிப் பாணைக்குள்
  நிரம்பியிருந்தது
  காற்று.

- பள்ளத்தில்
  மரமேறியின்
  வாழ்க்கை.

- கார்ச்சாரதிக்கு
  இல்லை
  சைக்கிள்.

**– ராஜகவி ராகில்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுயிரே!

கண்ணீர் கடல்போல் உருகும்
கன்னத்தில் ஆறாய் பெருகும்
எண்ணம் முழுதும் பரவும் - நீ
ஏனெனை மறந்தாய் உயிரே

இரவும் விடிந்தே முடியும்
இருளும் பிரிந்தே விடியும்
உயிரே மலர்ந்தே துளிரும்
உள்ளம் தெளிவே இல்லை

கண்களில் தூக்கமும் இல்லை
காதலென்று எதுவும் இல்லை
இன்பம் நிலைத்ததும் இல்லை
ஏனெனத் தெரியவும் இல்லை

அழைக்கவும் நாதியே இல்லை
அந்தரங்க வேளையும் இல்லை
உணர்வினில் உயிரும் இல்லை
உண்மைகள் புரியவும் இல்லை

ஆசைகள் யாருக்கு இல்லை
அகமும் பார்வைக்கு இல்லை
நேசத்தின் அளவும் இல்லை
நிம்மதி நிலைப்பதும் இல்லை
●

**- எழு கவி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்தவற்றில் பிடித்தவை.

## மேச்சல் மாடுகள்

**- நியாஸ் ஏ. ஸமத்**

மாடுகளை அவிழ்த்து
மேச்சந்தரை துரத்தினான்
புல்மேய்ந்து தனக்கு
பால்தரும் என்று

மாடுகள் மேய்ந்தன
புற்களை மென்றன
ஓடையில்
நீரும் அருந்தின அயர்ந்தும் தூங்கின
மடிநிறை பாலும் சுரந்தன வீங்கின

மாடுகள்
மமதை கொண்டன, நிலைதடுமாறின
வந்ததன்திக்கினை மறந்து நடந்தன

பாவம், பரிதாபம் பண்ணைக்காறன்
ஐந்தறிவு மாடுகளை மறந்து
ஆறறிவு மந்தைகளைத் தேடுகிறான்
புதிய மேச்சலுக்கும், பாலுக்குமாக...

●

## வெம்பு மணலில்...

**- மருதமுனை ஹஸன்**

ஒருபனைப் பொழுதில் சூரியன்
உரத்துப் பேசும் கடல்
மடி வெடிக்கும் நிலையில்
ஒரு சிறுதோணி
கரையேறிக் கொண்டிருந்தது

அள்ளிக் கொட்டினர்
அனல் மணலில் மீனை
தண்டயல் கத்தினார்
அழுக்கான மொழியில்
"கொண்டுவா படங்கை"

பதாகையாய் தொங்கியது
படங்காய்ப் படுத்தது
அத்தாங்கு மீனைப்
படங்கில் கொட்டினர்
தண்டையல் ஏறிக்
காலால் பரவி
ஊத்தை வார்த்தையால்
மீண்டுங் கத்தினார்
"கெதியா எடுங்கடா"

வெம்பு மணலில்
வேட்பாளன் சுடுமுகம்
வெந்து கொண்டிருந்தது

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓசைகொண்ட மௌனம்.

## – ஷியாம்

ரம்யங்களைக் கைப்பற்றும்
விருப்பு
பயணத்தை முந்தி
வனத்தையழைத்தது
பந்தயத்தில் வென்ற
மிகைக்களிப்பை மிகைத்தது

பூஞ்சணம் பூத்ததோ
இடித்த மஞ்சள் பரப்பி
உச்சியுலர்த்த
இலை கிழிக்கும் கீற்றோடிறங்க
உச்சிமுகரும் மேகத்துக்கு
ஆனந்தக் கண்ணீர் அப்பப்போ

மான்கொம்பில் தொங்கும்
மரநிறத்துச் சட்டை
கோடையங்கியென

யாரோ நீராடும் சலசலப்பு
பாடும் கிளையில் விரிய
கீச்சல்களெடுத்து கூடுபின்ன
வனமானேன் அமைதி விரித்து

இன்பம்.. இன்பம்..
ஓசை கொண்ட மௌனம்
கிணற்றடிக்கட்டில் குந்தி
நரைப்பாட்டி குளிக்க
சவர்க்கார நுரைகள்
கால்களிடையே
இறந்தகாலம் உருண்டோட
அமிழ்ந்து பிடித்தேன் நழுவி
துள்ளிக்குதித்தோடுது
வெள்ளை மனது.

●

# இனிக்கும் தமிழே!

## – எம் எச் ஏ கரீம்

உன்னோடுதான்
என் கவிதைகள்
பூக்கிறது...

நாராகிய
நானும் மணக்கிறேன்
தமிழ் பூவோடிணைந்து

உன் விரிந்த பரப்பில்
சாய்ந்து மணக்கிறேன்
நீ-
என் மொழியென்பதால்

நித்திரையிலும்
நீதான் பேசுகிறாய்
என் மொழியாகி...

என்
தாகம்
மோகம்
சினேகிதம்
இன்னுமாய் நீதான்

நீ-
திறந்து கிடப்பதால்
நான்-
நிரம்பியிருக்கிறேன்
அள்ளி வாசித்து...

இன்னும்
திறந்து தா
என்னை நீயாக்க!

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிக்கப்படா மௌனம்.

**– ஜமீல்**

அவளின் சொற்கள் யாருடனும்
பிடி கொடுக்காமல்
மௌனம் சாதித்து வருகின்றன

அறையின் இமைகளை சாத்தியபடி
தனித்திருக்கும் பதுமைக்கு
யார் மீது இத்தனை வெறுப்போ

அவள் கடைப் பிடித்து வரும்
நீட்சி மிகு மௌனம்
எனது வீட்டின் சிரிப்பை
மொத்தம் சிதைத்து விடாமலில்லை

பேரமைதி நிலவும்
மடந்தையின் இருள்
கவிந்த மனதை
எப்படி கலைப்பதென்று அறியேன்

தழுவிச் செல்லும் காற்றுக்கும்
பொடு பொடுக்கும்
மழைக்கும் கூட தெரியவில்லை

அறை முழுவதும்
விரவிக் கிடக்கும் மௌனத்துள்
எத்தனையெத்தனை கனவுகள்
வாசிக்கப்படாமல் இருக்கிறதோ.
●

# நிர்வாணம்

**– நபீல்**

விழுந்து கிடக்கிறது மரம்
நேற்று
வீசிய காற்றின் நினைவுகளோடு

நிமிர்ந்து பார்த்து
அதன் சேலையைச்
சரி செய்யும் காற்று
வழிதவறித் தள்ளாடி விழுந்ததோ
மரத்தில்

தோள்பட்டை மீதேறித்
தொண்டைக் குழிக்குள்
விம்மித் தணிந்ததோ

அதனிடையே கூர்கோடரி ஒன்று
சட்டென்று எழுந்து பறக்கின்றது
நிர்வாணியாக மரம்
மிகமோசமான காயங்களோடு
மேலும்

இடுப்பிலிருந்து துண்டை
நெஞ்சுவரை உயர்த்தி
காற்றுப்படுத்திய நினைவுகளை

மரம் ஒருபோதும்
மறப்பதாயில்லை.
●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர், புனைகதையாளர், பிறை FM வானொலி 'சந்தனக் காற்று' மூலம் நேயர்களைத் தன் வசப்படுத்திக்கொண்டிருக்கும் ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த கவிஞர் **ஜே. வஹாப்தீன்** அவர்களின்

## ஒலுவில் பிரதேசத்து வெகுசனப் பாடல்கள்:
## (தொகுப்பும் பகுப்பாய்வும்)

பக்கங்கள்: 268 பதிப்பு : 2021
வெளியீடு: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்.
தொடர்பு : 64, பழைய தபாலக வீதி, ஒலுவில்-03.
076 4185924




பிரதம தாதிய மேற்பார்வை அதிகாரியும், இலங்கை திறந்த பல்கலைக் கழக வருகைதரு விரிவுரையாளருமான ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த கவிஞர் தேசமான்ய **எஸ். ஜலால்டீன்** அவர்களின்

## அந்தி பூத்த வைகறை
## (புதுக்கவிதைத் தொகுப்பு)


பக்கங்கள் : 156 பதிப்பு : 2019 விலை: ரூபா. 700/=
வெளியீடு : செய்னம்பு ஹுசைமா வெளியீட்டகம், ஒலுவில்-04.
தொடர்பு : 123ஏ, அல்-அஷ்ஹர் வித்தியாலய வீதி, ஒலுவில்-04.
0777 280638




நூலகத்தில் பணிபுரிபவரும், தஞ்சாவூர் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மாணவியுமான மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த கவிதாயினி **மயிலிறகு மனசு ஷிபானா அஸீம்** அவர்களின்

## காதலென்பது வேறொன்றுமில்லை
## (கவிதைத் தொகுப்பு)

பக்கங்கள் : 126 பதிப்பு : 2022 விலை: இந்திய ரூபா. 150/=
வெளியீடு : எழிலினி பதிப்பகம், எழும்பூர், சென்னை.
தொடர்பு : கவிதாயினி ஷிபானா அஸீம், மருதமுனை.




இலங்கை வங்கி ஓய்வுநிலை முகாமையாளரும், இலக்கியப் பொன்விழாக் கண்ட கவிஞரும் பாடலாசிரியருமான பாலமுனை பிரதேசத்தை சேர்ந்த **பாவேந்தல் பாலமுனை பாறூக்** அவர்களின்

## பாவேந்தல் பாடல்கள்
## (இன்னிசைப் பாடல் தொகுப்பு)

பக்கங்கள் : 76 பதிப்பு : 2022 விலை: ரூபா. 600/=
வெளியீடு : பர்ஹாத் வெளியீட்டகம், பாலமுனை-03.
தொடர்பு : 14, பர்ஹானா மன்ஸில், பாலமுனை-03.
077 5367712


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் பதிவு

## விருதுகளும் விமர்சனங்களும்...

**- வ. ந. கிரிதரன் -**

எதற்காக எல்லாரும்
விருதுகளுக்காகவும்,
விமர்சனங்களுக்காகவும்
அலைகின்றார்கள்?
எழுத்தாளர்கள் அங்கீகார
மாயையிலிருந்து வெளிவர
வேண்டும். பாரதியைப்போல்
எழுத வேண்டும். அவை
சமுதாயப் பிரக்ஞைமிக்கவையாக
இருக்க வேண்டும்.
கலைத்துவம் மிக்கவையாகவும்
இருக்கவேண்டும். இருப்பை
உள்வாங்கியவையாகவும்
இருக்க வேண்டும். எழுதியதுடன்
எழுத்தாளர்களின் வேலை முடிந்து
விடுகின்றது. அவற்றின் தரம்,
பயனைக் காலம் நிர்ணயிக்கும்.

பேராசிரியர் கைலாசபதியின்
நூல்களுக்கு எத்தனை
விருதுகள் கிடைத்திருக்கின்றன.
எத்தனை விமர்சனங்கள்
வந்திருக்கின்றன. ஆனால்
அவரது எழுத்துகள் பலரையும்
பாதித்ததனால் அவற்றைப்பற்றி
இன்றும் பேசுகின்றார்கள்.
வாசிக்கின்றார்கள்.

இங்கு பெரும்பாலும் விருதுகளும்,
விமர்சனங்களும் தொடர்புகள்,
பரஸ்பர நலன்களின்
அடிப்படையில் கிடைப்பவை.
அவை பற்றி அலட்டிக்
கொள்ளத்தேவையில்லை.
விருதுகள் கிடைத்தால்
ஏற்றுக்கொள்ளுங்கள்.
விமர்சனங்கள் வந்தால்
ஏற்றுக்கொள்ளுங்கள்.
கிடைக்காவிட்டால் அவை பற்றி
அலட்டிக்கொள்ளாதீர்கள்.

விருதுகளை மூட்டைகளாக்கிச்
சுமப்பதில் வெகு பிரியம்
சிலருக்கு.
விருதுகள் பெரும்பாலும்
தொடர்புகளால் கிடைப்பவை.
வெகு சிலவே தகுதிக்குக்
கிடைப்பவை.
என் பிரிய எழுத்தாளர்கள்
பலருக்கு எவ்வித விருதுகளும்
கிடைத்ததில்லை.
என் தலைமாட்டில் எந்நேரமும்
தவழும் பாரதிக்கு விருதுகள்
எவையேனும் கிடைத்தனவா?
எந்நேரமும் என் வாழ்க்கையின்
வழிகாட்டிகள் அவை.
எழுதுங்கள்.
தெளிவு, உண்மை,
ஆற்றலிருப்பின் களி தரும்.
அவை காலம் கடந்து நிற்கும்.

**-வ. ந. கிரிதரன்**
**'பதிவுகள்'** இணைய இதழ் ஆசிரியர்.
22-02-2023.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து




● வளரும் கவிஞர்களுக்கு சிறந்த களம் அமைத்துக்கொடுத்து, பல சிரமங்கள் சுமந்து தங்களின் உன்னத உழைப்பால் வெளிவருகிறது 'வெண்ணிலா' கவிதை மஞ்சரி. தங்களின் உயரிய முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

கவியுலகில் தடம்பதித்த மற்றும் வளர்ந்துவரும் பல கவிஞர்களின் கவிதை களையும், ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவது 'வெண்ணிலா' சஞ்சிகைக்கு அழகு சேர்க்கிறது.

இன்னும் பல ஆக்கங்களோடு வெண்ணிலா தொடர்ந்து வெளிவர வேண்டுமென்ற அவாவில் அளவிலா ஆனந்தம் அடைகிறேன்.

நல்வாழ்த்துகள்.

**- நழீம் ஹனீபா, ஒலுவில்.**

● கிடைக்கப் பெற்றேன்!
மருதமுனை, ஸம் ஸம் வீதி, 378/2 என்ற முகவரியிலிருந்து வெளிவருகிறது 'வெண்ணிலா' - கவிதை மஞ்சரி. இதுவரை வெளிவந்த ஏழு பிரதிகள் ஒரு சேர அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

'வெண்ணிலா'வில் அனுபவக் கவிஞர்கள் சிலரும் வளர்ந்து வருவோர் பலரும் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்.

இளைய தலைமுறைக்கான பயிற்சிக் களமாகவும் பகிர்வுக் களமாகவும் விளங்குகிறது சஞ்சிகை. முயற்சி பாராட்டுக்குரியது!

**- அஷ்ரப் சிஹாப்தீன், வத்தளை.**

● "வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்" என்று இதுவரை 'வெண்ணிலா' கவிதை மஞ்சரி எட்டு இதழ்கள் வெளிவந்துள்ளன.


இதழ் ஆறு மற்றும் இதழ் எட்டில் எனது இரு கவிதைகள் வந்துள்ளதை பார்த்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

'வெண்ணிலா' ஆசிரியர் அவர்களின் உழைப்பு பேசப்பட வேண்டியது. அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றி.
**- காரையன் கதன், காரைதீவு.**

● 'வெண்ணிலா'வின் தொடர்ச்சியான வருகை கண்டு மட்டில்லா மகிழ்ச்சி. இலங்கைத் திருநாட்டில் மட்டுமல்ல அகிலம் எல்லாம் ஒளி பரப்ப பிராத்திப்பதோடு மனம் மகிழ வாழ்த்துகிறேன்.

**- எச். எல். நஜிமுத்தீன், மருதமுனை.**
(ஓய்வுநிலை முகாமையாளர்,
இலங்கை வங்கி.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் 289, பிரதான வீதி, மருதமுனை Jesa Grafix இல் [illegible] 2023இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை மாநகரில் (அமானா வங்கி முன்பாக) ...

- நேரடியாக சகலவிதமான விமான பயண டிக்கற்களை உடனடியாக பெற்றுக் கொள்வதோடு
- Budget & Economy வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாடுகள் (India, Maldives, Thailand & Europe)
- வெளிநாடு ஒன்றிற்கு குடிபெயர்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள்
- Other Air ticketing related services
- Hajj & Umra Arangements
- Visa related Assistances
- Student Visa Guidance




IATA

# mH Travels & Tours

Since 1986

*Ur Travel & Progress Companion*

No. 9, Main Street, Kalmunai. Hotline : 077 067 3062
Head Office : 323, Maccamady Road, Maruthamunai - 03. Tel : 067 222 9486
mhtravelsntours@gmail.com Tel : 067 205 9434, 075 808 9968

## Business & Tax consultation in the Heart of Kalmunai Town...

- Tax Planning
- Income Tax
- VAT / SVAT
- NBT / ESC (old)
- CGT
- PAYE / APIT (Employer)
- Agribusiness consultation
- Audit
- Accounts Preparation
- IAS / IFRS, LKAS / SLFRS Consultancy
- Book Keeping
- Outsourcing services
- POS Solution
- Cooperate Secretarial Services

# elite

Biz & Tax Consultancy

No. 10, Main Street, Kalmunai. M : 077 067 3062
Tel : 067 205 9434, info@elitetaxcon.com, www.elitetaxcon.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org